# NEW MODEL QUESTION PAPER
# TAMIL - Subject Code : (04)
# I PUC
# [Total no of Questions : 60]

**Time : 3 Hours 15 Minutes]** **[Max.Marks : 100**

**மாணவர்களின் கவனத்திற்கு :**

1. **கையெழுத்து தெளிவாகவும் அழகாகவும் இருக்க வேண்டும்.**
2. **வினாத்தாளில் கொடுக்கப்பட்டுள்ள வினா எண்களை சரியாக எழுத வேண்டும்.**
3. **கட்டுரை ஒரு பக்க அளவில் இருக்க வேண்டும்**

## பகுதி - ஒன்று

**அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக:**

**I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்பு டைய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடை என்னையும் சேர்த்து எழுதுக:** **5X1=5**

1. ஒன்றாகவும் பலவாகவும் இருப்பவன்

அ. இறைவன் ஆ. தலைவன்

இ. தொண்டன் ஈ. மனிதன்

2. இதற்கு அடைக்கும் தாழ் இல்லை

அ. புகழுக்கு ஆ. அறிவுக்கு

இ. அன்புக்கு ஈ. பணத்திற்கு

3. கண்ணகியின் மென்நடைக்கு தோற்றது _________ .

அ. அன்னம் ஆ. கொக்கு

இ. மயில் ஈ. நாரை

4. வெஸ்ட் மினிஸ்டர் அபே என்ற கிறிஸ்தவ ஆலயம் இருக்கும் இடம்

அ. ஆஸ்திரேலியா ஆ. நியூயார்க்

இ. பிரான்ஸ் ஈ. லண்டன்

5. கூடல சங்கம தேவனை அறிய இதுவே அடிப்படையாம்.

அ. குருநெறி ஆ. பொன்

இ. அடியவர் கூட்டம் ஈ. மண்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக: 5X1=5**

6. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று ____________.
7. சிங்கம் பசித்தாலும் துன்புற்றாலும் __________ தின்னாது.
8. நாட்டுப்புறப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள இட்லியின் நிறம் _________ .
9. ஆதி இதிகாசமாக ________ போற்றப்படுகிறது.
10. பெண்ணுக்கு ___________ அலங்காரம்.

**III. பொருத்துக: 5X1=5**

11. காளத்தி வேடன் - பெரியார்
12. வெள்ளைக் கோயில் - அடியவர் கூட்டம்
13. தேவனை அறிய - சுடுகாடு
14. குடியரசு - தேம்ஸ் நதி
15. லண்டன் - கண்ணப்பன்

**IV. ஓரிரு வரிகளில் விடை எழுதுக: 5X1=5**

16. ஐம்பெரும் குரவரில் இருவரைக் குறிப்பிடுக:
17. கலிங்கத்துப்பரணியில் கணவரைக் கண்டவுடன் மனைவியர் மறந்து விடுவது எதை?
18. இசைக்கு பெருமை தந்த நகர் எது?
19. நாவினால் நுகரப்படும் சுவை எத்தனை வகைப்படும்?
20. வேட்கை சிறுகதையில் யாருக்கு நிரம்பவுமே உள்ளம் வலித்தது?

# பகுதி - இரண்டு

## பிரிவு - 1

**அ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக: 3X2=6**

21. தமிழ் மொழி எப்படித் துலங்கி சுடர வேண்டும் என்கிறார் பாரதியார் ?
22. அதியமான் நெடுமான் அஞ்சியின் அழகும் வலிமையும் எத்தகையது?
23. ‘மனோன்மணீயம்’ இந்நூல் பற்றி குறிப்பு எழுதுக::
24. எத்தகைய மனிதருக்கு என்றும் இன்பம் கிடைக்கும்?

## பிரிவு - 2

**ஆ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக: 3X2=6**

25. வெள்ளிக்கிழமை விளக்கு வைத்த நேரத்தில் பொன் நகையை வெளியில் கொடுக்கலாமா? என்று கூறிய வைதீகருக்கு நகை வியாபாரி கூறியவற்றை எழுதுக?
26. பெண் திருமணத்திற்கு பிறகு எதையெல்லாம் தியாகம் செய்கிறாள்?
27. லண்டன் பத்திரிக்கைகளின் அட்டைப் படங்கள் பற்றிக் கட்டுரை ஆசிரியர் கூறுவனவற்றை எழுதுக:
28. உலகத்தை ஒரு நாணயச் சாலையோடு ஒப்பிட்டு பசவண்ணர் கூறுவது யாது?

## பிரிவு - 3

**இ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக : 3X2=6**

29. தோட்டி தனக்குத்தானே பேசிக் கொண்டது என்ன?
30. அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்ததும் செங்கோடன் அடைந்த துன்பத்தை எழுதுக:
31. தமிழ் சினிமாக்களின் நடிகர்களோடு வீர சிங்கத்தை ஒப்பிட்டு வல்லிக்கண்ணன் கூறுவதை எழுதுக:
32. உங்கள் வேர்களைத்தேடி வந்தீர்களா? என்று கேட்ட பத்திரிகை நிருபருக்கு மேத்யூநாதன் கூறிய பதிலை எழுதுக:

## பகுதி - மூன்று

**எவையேனும் மூன்று வினாக்களுக்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் எழுதுக: 3X3=9**

33. "முதிர் கடல் ஞாலம் முழுதும் விளங்கும்
 கதிர் ஒருங்கு இருந்து காட்சி போல!"
34. ''வலியதோர் உள்ளம் கொண்டார்
 வாழ்வதில் பெருமை கண்டார்''
35. "இவரிடம் அறிவு பயிற்சி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை மூவாயிரமாகும்!"
36. ''இவர்கள் ஆடைகளை நெய்து அரசர்க்கும், வேதியர்க்கும், கடவுளுக்கும் கொடுத்து வந்தனர்''
37. தன் அரவணைப்பில், தன் அன்பில், தனது கண்ணீரில், தனது ஒட்டுதலில் அவளை இருத்திக் கொள்வதையே தன் கடமையாக ஏற்றுக் கொண்டாள்''

## பகுதி - நான்கு

### பிரிவு - 1

**அ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 2X4=8**

38. இறைவனின் இயல்புகளாகத் தாயுமானவர் தெரிவித்துள்ளதை யாவை?
39. அன்புடைமையின் சிறப்பினைத் திருவள்ளுவர் எவ்வாறு விவரித்துள்ளார்?
40. ''கண்ணம்மா என் குழந்தை'' என்ற பாடலில் கவி சுப்பிரமணிய பாரதியார் கூறியுள்ளவற்றை எழுதுக:

### பிரிவு - 2

**ஆ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 2X4=8**

41. காளத்தி மலையில் அமர்ந்த ஈசனுக்கு ஆளாகக் கருதிய பட்டினத்து அடிகள் கூறிய கருத்துக்களை எழுதுக:
42. உலகத்திலேயே அழகிய பகுதி என்று கட்டுரை ஆசிரியர் கூறும் இடத்தின் சிறப்பம்சங்களை விவரித்து எழுதுக?
43. பசவண்ணரின் கவி மனத்தைக் குறிப்பிடுக:

**பிரிவு - 3**

**இ. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு ஐந்து அல்லது ஆறு வாக்கியங்களில் விடை எழுதுக: 2X4=8**

44. ''செவ்வாழையைக் கண்டு செங்கோடன் சந்தோஷம் அடைவதற்கான காரணங்களை விவரித்து எழுதுக:
45. 'யுகசந்தி' சிறுகதை கூறும் சமூகக் கருத்துக்களை எழுதுக:
46. மருமகள் வார்த்தைகளால் சேமலையப்பன் அடைந்த துன்பத்தை விவரித்து எழுதுக:

## பகுதி - ஐந்து

**அ. கீழ்காணும் பாடலின் பொருளை எழுதி அணியை விளக்குக: 1X5=5**

47. ''செம்புலப் பெயல் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாங்கலந் தனவே''

அல்லது

48. ''என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம்''

**ஆ. எவையேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக: 7X2=14**

49. சேர்த்து எழுதுக:

என் + தந்தை / அன்பு + இலார்

50. பிரித்தெழுதுக :

குறுங்கண் / திசையெட்டும்

51. எதிர்ச்சொல் எழுதுக.:

மகிழ்ச்சி X / புதிது X

52. இலக்கணக் குறிப்பு எழுதுக:

வைரமணி / தினந்தினம்

53. கீழ் வரும்  தொடர்களில் உள்ள மரபுப் பிழைகளைத் திருத்தி எழுதுக:

தென்னை இலையால் கீற்றுப் பின்னுவார்கள்.
பனந்தோட்டத்தில் ஆந்தை அகவுவது கேள்.

54. கீழ்வரும் தொடர்களை வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

சுத்தம் சோறு போடும்
எண்ணம் போல வாழ்வு

55. சொற்களின் வேறுபாடு அறிந்து பொருள் எழுதுக:

பரவை / பறவை

56. பின்வரும் வாக்கியத்தை அடைப்பிற்குள்  கேட்டுள்ளவாறு மாற்றி எழுதுக:

பெரியார் தன் வாழ்நாள் முழுவதும் மூடநம்பிக்கைகளை எதிர்த்து போராடினார்.   (நிகழ் கால, எதிர்கால வாக்கியமாக மாற்றுக):

## பகுதி - ஆறு

### பிரிவு - 1

**அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கட்டுரை வரைக: 1X5=5**

57. எனக்குப் பிடித்த அயல்நாடு
58. மனித கற்பனையின் அவசியம்

## பிரிவு - 2

**ஆ. கீழ்க்காணும் வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு விடை எழுதுக: 1X5=5**

59. உணவு விடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்கு கடிதம் எழுதுக:

அல்லது

60. தமிழில் மொழி பெயர்த்து எழுதுக:

    1. Yoga is not a religion.
    2. It is a great philosophy, an art, a science and a way of life.
    3. It aims at developing a perfect balance between the body and mind.
    4. As well as individuals and the universe.
    5. Great sages invented it several thousand years ago.

# புகுமுக முதலாம் ஆண்டு நீல வரைபடம்

| அலகு | அறிதல் | | | புரிதல் | | | வெளியிடல் | | | பாராட்டல் | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குறு வினா | சிறு வினா | புற வினா | குறு வினா | சிறு வினா | புற வினா | குறு வினா | சிறு வினா | புற வினா | குறு வினா | சிறு வினா | புற வினா | |
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | |
| பாநடை | | | | | | | | | | | | | |
| 1 | 1(1) | | 1(2) | | | 1(4) | | | | | | | 3(7) |
| 2 | | 1(2) | | 1(1) | | | | | | | | | 2(3) |
| 3 | | 1(1) | | | 1(4) | | | | | | | | 2(5) |
| 4 | | | 1(2) | | 1(1) | | | 1(4) | | | 1(3) | | 4(10) |
| 5 | 1(1) | | | | | 1(1) | | | | | | | 2(2) |
| 6 | | 1(4) | | 1(1) | | 1(1) | | 1(1) | | | | | 4(7) |
| 7 | | | | | 1(2) | | | | | 1(2) | | | 2(4) |
| உரைநடை | | | | | | | | | | | | | |
| 1 | | 1(1) | | | | | | 1(2) | | | | | 2(3) |
| 2 | 1(1) | | 1(4) | | 1(1) | | | | | | | | 3(6) |
| 3 | | | 1(3) | | | | | | 1(2) | | | | 2(5) |
| 4 | | 1(1) | | | | | | 1(2) | | | | | 2(3) |
| 5 | | | | 1(2) | 1(1) | | | | | 1(3) | | | 3(6) |
| 6 | 1(1) | | | | | | 1(2) | | | | | | 2(3) |
| 7 | 1(1) | | | 1(2) | | 1(4) | | 1(1) | | | | | 4(8) |
| 8 | | 1(1) | | 1(2) | | 1(1) | | | 1(4) | | | | 4(8) |
| புறநடை | | | | | | | | | | | | | |
| 1 | | | | | 1(1) | | | | | | | | 1(1) |
| 2 | | 1(2) | | | | | | | 1(2) | | | | 2(4) |
| 3 | | | | 1(2) | | | 1(4) | | | | | | 2(6) |
| 4 | | 1(2) | | | | | | | | | | | 1(2) |
| 5 | | | | 1(3) | | 1(4) | | | | | | | 2(7) |
| 6 | | 1(1) | | 1(4) | | | | | | 1(2) | | | 3(7) |
| 7 | | | | | | | | 1(2) | | | | | 1(2) |
| 8 | | | 1(2) | | | | | | | | | | 1(2) |
| அணி | | | | | | | | | 1(5) | | | 1(5) | 2(10) |
| கட்டுரை | | | | | | | | | 1(5) | | | 1(5) | 2(10) |
| கடிதம் | | | | | 1(5) | | | | | | | | 1(5) |
| மொழி | | | | | | | | 1(5) | | | | | 1(5) |
| மொத்தம் | 5(5) | 9(15) | 5(13) | 8(17) | 7(15) | 6(15) | 2(6) | 7(17) | 5(18) | 3(7) | 1(3) | 2(10) | 60(141) |